**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08032024-7019

Volume: 8

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 04.10.2023

Accepted: 20.12.2023

Published: 01.01.2024

Citation:
Murugesapandian, N. "The Creation of the Literary Personality of Bharathidasan." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 3, 2024, pp. 1–13.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i3.7019

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Creation of the Literary Personality of Bharathidasan

**N. Murugesapandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

Poet Bharathidasan's poems, who described himself as Tamil and Tamils, influenced deeply into Tamil society. Bharathidasan, who wrote poetry in favor of the Tamil national consciousness as Tamil, Tamils, Tamil race, was against Vedic Sanathana. He felt that all the religions of the world were against human development. He believed that economic emancipation was possible only through true social emancipation, freed from immediate problems and respecting man. Bharathidasan's poetry, which records the vicissitudes and exaltations of daily life, has retained its place in Tamil history.

**Key Words:** Tamil Poetry, Bharathidasan, Bharatiyar, Criticism, Tamil Identity, Anti-Vedic Sanatana, Revolutionary Poet, Tamil National Poet, Dravidian Movement.

**References**

1. *Poems of Bharathidasan*. Chennai: Sri Hindu Publishing House, 2015.
2. Erode Tamilanban. *Ten years with Bharathidasan*. Chennai, Vision Publishing, 2000.
3. Ilangovan. Bharathidasan Paramparai. Arcade, Mughilarasi Publishing House, 2001.
4. Nellai N Chokkalingam. *Baventrain's Thought and Writing*. Thanjavur: Tamil University, 2014.

# பாரதிதாசன் என்ற இலக்கிய ஆளுமையின் உருவாக்கம்

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ், தமிழர் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள் தமிழ்ச் சமூகத்தில் ஆழமாக ஊடுருவின; நுட்பமான பாதிப்புகளை ஏற்படுத்தின. தமிழ், தமிழர், தமிழினம் என்று தமிழ்த் தேசிய உணர்வினுக்குச் சார்பாகக் கவிதையெழுதிய பாரதிதாசன், வைதிக சநாதனத்திற்கு எதிரானவர். அவர், உலகிலுள்ள மதங்கள் யாவும் மனித வளர்ச்சிக்கு எதிரானவை என்று கருதினார். அரசியல் விடுதலைதான் முதன்மையானது. அதனைத் தொடர்ந்து பொருளாதார விடுதலை கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்தவர்களிடையே பாரதிதாசனின் அணுகுமுறை வேறுபட்டது. அவர், உடனடிப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு மனிதனை மனிதன் மதிக்கின்ற உண்மையான சமுதாய விடுதலையின்மூலம்தான் பொருளாதார விடுதலை சாத்தியம் என்று நம்பினார். அன்றாட வாழ்வின் இழிவுகளையும் மேன்மைகளையும் பதிவாக்கியுள்ள பாரதிதாசனின் கவிதை ஆளுகை, தமிழர் வரலாற்றில் தனக்கான இடத்தினைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்க் கவிதை, பாரதிதாசன், பாரதியார், திறனாய்வு, தமிழர் அடையாளம், வைதிக சநாதன எதிர்ப்பு, புரட்சிக் கவிஞர், தமிழ்த் தேசியக் கவிஞர், பொதுவுடைமைக் கவிஞர், திராவிட இயக்கம்.*

தமிழ் என்னும் மொழியினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் வாழ்ந்து வரும் தமிழர்கள் வரலாற்றுப் பின்புலமும் பாரம்பரியமும் மிக்கவர்கள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழர் வாழ்க்கையானது பல்வேறு சமூகப் பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தது. ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசினால் ஒடுக்கப்பட்டிருந்த பெரும்பாலான மக்கள், அடக்குமுறையினை எதிர்க்கும் மனப்பான்மை இல்லாமல், தலைவிதித் தத்துவத்தில் சமரசமாகி இருந்தனர். இன்னொருபுறம் வைதிக சநாதன சமயம் பிறப்பின் அடிப்படையில் மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளையும் தீண்டாமையையும் கற்பித்தது. இதனால், மக்களுக்குச் சேவை செய்யும் குயவர், கொல்லர், நாவிதர், வண்ணார், உழவர் போன்றோரைக் கேவலமாகக் கருதும் நிலை நிலவியது. பஞ்சமர் என அழைக்கப்பட்ட தலித்துகளை இந்து மதத்தின் பெயரால் அடக்கியொடுக்கும் அரசியல் ஆழமாக வேரூன்றிருந்தது. சாதி, மத ஒடுக்குமுறையுடன் பொருளாதார நிலையில் அல்லலுற்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பிஜி, மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா, இலங்கை, மலேயா, டச்சுக் கயானா போன்ற நாடுகளுக்குக் கூலிகளாகக் கப்பலேறிப் போயினர். தமிழகமெங்கும் அடிக்கடி பஞ்சங்கள் வந்து, விளிம்பு நிலையினர் ஆயிரக்கணக்கில் மடிந்தபோது, ஆங்கிலேயரும் அவருடைய அடிவருடிகளான உயர் பணிகளில் உயர்ந்த இடங்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்த பார்ப்பனர்களும் கிராமப்புறங்களில் வசதியாக வாழ்ந்து வந்த மேல்சாதி நிலக்கிழார்களும் தொடர்ந்து வருணாசிரம முறையை வலியுறுத்தி வந்தனர். இதனால் வள்ளலார், பாரதியார் போன்ற கவிஞர்கள்,

ஏற்கனவே நிலவும் சமூக மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் கவிதைகள் எழுதினர். அவை ஓரளவு கல்வியறிவு பெற்றிருந்த விளிம்பு நிலையினரிடம் பாதிப்பை ஏற்படுத்தின. இலக்கியம் என்பது முழுக்கக் கடவுளைத் துதிபாடுதல், பழைய சநாதன மரபினைப் போற்றுதல் என்ற நிலையிலிருந்து மாறுபட்டுச் சமூகப் பிரச்சினைகளை மையமிட்டுக் கவிதைகள் எழுதிய பாரதியாரின் இலக்கியம் தனித்துவமாக விளங்கியது. பாரதியாருடன் ஏற்பட்ட இலக்கியத் தொடர்பு காரணமாகப் புதுச்சேரியில் வாழ்ந்த கனகசுப்புரத்தினம் என்ற இளம் கவிஞர் தனது பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டது தற்செயலானது அல்ல. எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் ஆளுகை செலுத்துவதற்கான செயற்பாடுகள், இளைஞரான பாரதிதாசனின் நடத்தையில் வெளிப்பட்டன. தனது வாழ்நாள் முழுக்கத் தமிழ், தமிழர் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள் தமிழ்ச் சமூகத்தில் ஆழமாக ஊடுருவின; நுட்பமான பாதிப்புகளை ஏற்படுத்தின. தமிழர் இனவாதத்தை முதன்மைப்படுத்திய கவிஞர் எனப் பாரதிதாசன் மீது பிற்காலத்தில் குற்றம் சாட்டப்பட்டாலும், அவருடைய சமூக அக்கறையானது பல்வேறு தளங்களில் வீர்யமான கவிதை வரிகளாக வெளிப்பட்டுள்ளது. பாரதிக்குப் பின்னர் பாரதிதாசன் என்ற இலக்கிய ஆளுமை உருவானதற்கான சமூகப் பின்புலம் ஆய்விற்குரியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கருத்துகள் இந்தியாவில் உருவாயின. இந்தியர்களின் பேராட்ட உணர்வினுக்கு வடிகாலாக ஹியூம் என்ற ஆங்கிலேயரால் 1885ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட காங்கிரஸ் இயக்கம், பின்னர் விடுதலைப் போராளிகளின் களமாக மாற்றம் பெற்றது. குழந்தை மணம், சதி என்ற பெயரால் கணவனை இழந்த பெண்ணைச் சிதை நெருப்பில் எரித்தல் போன்றவற்றை வலியுறுத்தும் வருணாசிரமக் கொடுமைகளுக்கு எதிராக ஆங்கிலேய அரசு இயற்றிய சீர்திருத்தச் சட்டங்கள் சமூக அடுக்கில் உயர்நிலை வகித்த பார்ப்பனர்களுக்கும், மேல்சாதி இந்துக்களுக்கும் கோபத்தை ஏற்படுத்தின. தங்களுடைய மரபு வழிபட்ட ஆதிக்க உரிமைகள் பறிக்கப் பட்டதாகக் கருதிய சநாதனவாதிகள், கருத்துரீதியில் ஆங்கிலேயருடன் மோதத் தொடங்கினர்.

1857 இல் தொடங்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆங்கிலேயக் கல்வி முறை காரணமாகத் தமிழக இடைநிலைச் சாதியினர் விழிப்புணர்வு அடைந்தனர். சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டு, தீண்டாமையினால் நசுக்கப்பட்ட அடித் தட்டு மக்கள், பண்பாடு என்ற பெயரில் இதுவரை நிலவிவந்த மூடத்தனங்களை எதிர்த்தனர். இன்னொருபுறம் அரசியல் விழிப்புணர்வு பெற்ற மக்கள், எதேச்ச திகாரக் கொடுமைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். இந்நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைப் பிரதிபலித்த விடுதலைப் போராட்ட இயக்கம், சமூகச் சீர்திருத்த இயக்கம், ஆகிய இரு அமைப்புகளும் தமிழகத்தைப் பொறுத்தவரையில், முக்கியமானவை. இவ்விரு இயக்கங்களின் சார்பில்லாமல், அன்றைய காலகட்டத்தில் எந்தவொரு சிந்தனையாளரும், இலக்கியவாதியும் இருக்க வாய்ப்பில்லை. விடுதலைப் போராட்டக் காலத்தில் செயற்பட்ட பாரதியின் கவிதைகள் புதிய தளத்தில் வீச்சாக வெளிப்பட்டன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் சநாதனக் கொடுமை ஆழமாக ஊடுருவியிருந்த சூழலில் பாரதிதாசன் போன்ற கவித்துவ ஆளுமை உருவானது காலத்தின் தேவையாகும். வடவர் எதிர்ப்பு,

மூடநம்பிக்கை எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதிகள் ஒழிப்பு, விதவை மறுமணம், பார்ப்பனிய எதிர்ப்பு, வருணாசிரம ஒழிப்பு, பகுத்தறிவு நோக்கு, தமிழின் மேன்மை, தமிழரின் பண்பாட்டுச் சிறப்பு போன்றவை குறித்துப் பாடல்களும் கவிதைகளும் எழுதிய பாரதிதாசனின் ஆளுமை, அன்றைய தமிழ்ச் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புடையது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக வருணாசிரம முறையை வலியுறுத்திய வைதிக சநாதனம், தமிழகத்தில் சோழப் பேரரசின்போது, மேலாதிக்கம் பெற்று, அரசியல் ரீதியில் மக்களை ஒடுக்கியது. கோயிலில் வழிபாட்டு மொழியாக இருந்த தமிழ் புறக்கணிக்கப்பட்டுச் சமஸ்கிருதம் ஆதிக்கம் பெற்றது; பெரும்பான்மைத் தமிழரின் பொருளியல் வாழ்க்கை சிதைவடைந்தது. சாதி, தீண்டாமை, பாவபுண்ணியம், கர்மவினை தலையெழுத்து போன்ற கருத்துகளைப் புராணங்கள், இதிகாசங்கள், வேதங்கள் போன்றவற்றின் மூலம் பரப்பித் தமிழர்களை அடிமைப்படுத்தும் சூழல் ஏற்படுத்தப்பட்டது. இதன்மூலம் சமூக அடுக்கில் பார்ப்பனர்கள் தொடர்ந்து உயர்நிலை வகித்தனர். தமிழர்களின் பண்பாட்டுச் சீரழிவுகளுக்குக் காரணம் ஆரியர்களான பார்ப்பனர்களே என்ற கருத்தை முன்வைத்துப் போராட முனைந்த சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தினரின் நோக்கத்தில் பொருளாதார நலனும், புதைந்திருந்தது. 1882 ஆம் ஆண்டு முதல் 1904ஆம் ஆண்டு வரை மாநில சிவில் பணியில் 16இல் 15 பேர் பார்ப்பனராகவும், உதவிப் பொறியாளர்களில் 21இல் 17 பேர் பார்ப்பனராகவும், துணை மாவட்ட ஆட்சியர்களில் 147இல் 77 பேர் பார்ப்பனராகவும், 128 மாவட்ட முனிசிப்புகளில் 98 பேர் பார்ப்பனராகவும் இருந்தனர். இப்புள்ளிவிவரம் அன்று ஆங்கிலேய அரசில் பார்ப்பனர் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டுகின்றது. இதே காலகட்டத்தில் வளர்ந்து வந்த காங்கிரஸ் இயக்கத்திலும் பார்ப்பனர்களின் கை மேலோங்கியிருந்தது. இத்தகு சூழலில் பார்ப்பனர் அல்லாதவர்கள் அரசு நிர்வாகத்தில் பங்கேற்க முயன்றனர். கருத்தியல் ரீதியில் பார்ப்பனர்களின் மேலாதிக் கத்தைத் தகர்க்க முயன்றனர். 1916 இல் தோற்றுவிக்கப்பட்ட “தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்” பார்ப்பனர் அல்லாதவர்களின் நலன்களை முன்னிறுத்தியது. பின்னர் அது நீதிக்கட்சியாக மாற்றம் பெற்றது. வடக்கிலிருந்து வந்த பார்ப்பனர்கள், தமது சூழ்ச்சித் திறனால், தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி அடிமைப்படுத்தினர் எனவும், இத்தகைய அடிமை நிலைக்கு எதிராகச்சுயமரியாதையுடன்விளங்குவதன் மூலம் திராவிட இனத்தின் சிறப்பைப் போற்ற முடியும் என்று திராவிட இயக்கத்தினர் கருதினர். அரசியல் ரீதியில் போராடி ஆங்கிலேயரின் ஆட்சியதிகாரத்தை வீழ்த்துவதை விட, பார்ப்பனர்களின் மேலாதிக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் திராவிடர்களை விடுவிக்கச் சமுதாயப் புரட்சியே உடனடித் தேவையென்பது திராவிட இயக்கத்தினரின் கருத்து. இத்தகைய திராவிடர்-ஆரியர் இன முரண்பாடு, அன்றைய காலகட்டத்தில் வெளியான கலை இலக்கியப் படைப்புகளில் மூட நம்பிக்கைகள் ஒழிக்கப்பட்டுப் வெளிப்பட்டது. புதியதோர் உலகம் செய்யப்பட வேண்டுமென்ற திராவிட இயக்கத்தாரின் கருத்துகள் எங்கும் பரவின. இத்தகைய பின்புலத்தில்தான் பாரதிதாசன் என்ற கவிஞரின் எழுச்சியை மதிப்பிட வேண்டும்.

**புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகினை வேரோடு சாய்ப்போம்**

என்று தன்னையும் உளப்படுத்திக் கவிதை பாடிய பாரதிதாசனின் இளமைப் பருவம் வேறுவயப்பட்டது. கனகசுப்புரத்தினம் என்ற முதலியார் வீட்டு இளைஞரின் பள்ளிப்

பருவம் மரபு வழிபட்டது. பாரதிதாசனின் தந்தையரான கனகசபை முதலியார் சைவ நெறியினர்; ஆகமங்களில் நம்பிக்கை மிக்கவர். பாரதிதாசன் பள்ளிக்கூட ஆசிரியர் திருப்புளிசாமி வைணவர். அவர் மார்கழி மாதம் தெருக்களில் பாரதிதாசன் உள்ளிட்ட மாணவர் பஜனைக் குழுவினர் மூலம் திருப்பாவை பஜனை நடத்தினார். மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது, மயிலம் ஸ்ரீ சண்முகர் வண்ணப் பாட்டு, மயிலை ஸ்ரீ சண்முகக் கடவுள் பஞ்சரத்னம் ஆகிய மரபு வழிபட்ட சந்தப் பாடல்களைப் பாடிய கனக சுப்புரத்தினம் பதின்பருவத்தினர். காங்கிரஸ் பேரியக்கத்தின் தொடர்பு ஏற்பட்ட பின்னர், பாரதியாரின் முன்னால் சக்தியின் பெருமையைப் பாடியது கதர்ப்பாடல் பாடியது போன்றவை கனக சுப்புரத்தினம் என்ற இளைஞனிடம் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடுகள். பாரதியாரிடம் கொண்ட ஈடுபாட்டினால் பாரதிதாசன் என்ற புனைபெயரைப் புனைந்துகொண்ட கனக சுப்புரத்தினம் உணர்ச்சிப் பெருக்குடையவர். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் நிலவிய அரசியல், சமூக நிலைமைகள் ஏற்படுத்திய பாதிப்புகள் வழியாகத் தனது அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டார். இந்திய தேச விடுதலை காந்தி, ஒத்துழையாமைக் கொள்கை, விடுதலைப் போராட்டத் தலைவர்கள், பாரத மாதா எனப் புதிய பாடுபொருளில் எளிய நடையில் பாடல்கள் பாடியது. பாரதிதாச னுக்குள் கருத்தியல்ரீதியில் ஏற்பட்ட புதியதொரு மாற்றம். சமூக அக்கறையுடன், சமூகக் கருத்துகளைப் பாடலாக்கியது, பாரதியாரின் தொடர்பால் பாரதிதாச னுக்கு ஏற்பட்டதாகும். பாரதிதாசன் திருபுவனையில் ஆசிரியராகப் பணியாற்றிய போது, பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என அரசினால் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்; பணி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால் அரசின் முடிவு தவறானது என நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து மீண்டும் ஆசிரியர் பணியில் சேர்ந்தார். பாரதிதாசன் தனது 28 ஆம் வயதில் அரசை எதிர்த்துப் போராடிய மனநிலை, அவரைக் கருத்தியல் போராளியாக மாற்றுவதற்கான பின்புலமாகும்.

மாயவரத்தில் 1928இல் நவம்பர் மாதம் நடைபெற்ற கூட்டத்தில் பெரியாரும் வரதராஜுலு நாயுடுவும் பேசிய பேச்சுகளைக் கேட்பதற்காகச் சென்ற பாரதிதாசனின் மனதில் மாற்றம் ஏற்பட்டது. பெரியார் என்ற ஆளுமையினால் சர்க்கப்பட்டு ஒரே நாளில் பாரதிதாசன் மனம் மாறினார் என்று ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். அக்கருத்து ஏற்புடையதன்று. இறை நம்பிக்கையுடன் சராசரி மனிதராக வாழ்ந்த பாரதிதாசன் தனது 46-ஆவது வயதில் திடீரென திராவிடர் கழகத்தின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை. பாரதியுடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாகப் பாரதிதாசனுடைய மனப் பரப்பு ஏற்கனவே விசாலமடைந்திருந்தது. மணியாச்சி ரயில்நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் வழக்கில் தேடப்பட்ட மாட சாமிக்கு அடைக்கலம் தந்ததுடன், அவரைக் கட்டுமரத்தில் அழைத்துச் சென்று நடுக்கடலில் சைகோன் செல்லும் கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்துள்ளார், பாரதிதாசன். அன்று தமிழகமெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்ட கொலை வழக்கினில் சிக்கியவரைக் காப்பாற்றிய செயல், பாரதிதாசனின் துணிச்சலான மனநிலைக்கு எடுத்துக்காட்டு. பாரதியினால் புதிய பாதைக்கு வழிகாட்டப்பட்ட நிலையில், அவருக்குத் தொண்டு செய்கின்றவன் என்ற நிலையில் பாரதிதாசன் என்ற புனைபெயரைப் புனைந்து கொண்டவர், பாரதி வழியில் தொடர்ந்து செல்லவில்லை. ஒருவர் தன்னுடைய இயல்பிலிருந்து முழுக்க மாறுவது, இன்னொருவரின் தொடர்பினால் சாத்தியமில்லை என்பதற்குப் பாரதி - பாரதிதாசன் உறவு சிறந்த சான்று.

1935 இல் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் என்ற பெயரில் பாடல், கவிதைகளுக்கெனத் தனியான இதழினைப் பாரதிதாசன் கொண்டுவந்தார். அந்த இதழ் இந்திய அளவில் முதன்முதலாகப் பாடலுக்கெனத் தனியாகத் தொடங்கப்பட்டது என்ற நிலையில், பாரதிதாசனுக்கும் கவிதைக்குமான நெருங்கிய உறவினைப் புரிந்து கொள்ள முடியும் புதுவை கலைமகள், தேசோபகாரி, ஆனந்தபோதினி, சுதேச மித்திரன், தேசபக்தன் ஆகிய இதழ்களில் தொடர்ந்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதிக்கொண்டிருந்த பாரதிதாசனுக்குள் படைப்பு மனம் நுட்பமாகச் செயல்பட்டது. பாரதிதாசன் தனது முதல் கவிதைத் தொகுதியை காலம் தாழ்த்தி தனது 47 ஆவது வயதில் வெளியிட்டதற்கான பின்புலம் ஆய்விற்குரியது. பல்வேறு சமூக நிகழ்வுகளில் கொண்டிருந்த ஈடுபாடு அல்லது தன்னடக்கம் காரணமாகப் பாரதிதாசன் என்ற கவிஞர் பிம்பம் அவருக்குள் மெல்லத்தான் படிந்தது.

விடுதலைப் போராட்டம் வீச்சாகப் பற்றிப் படர்ந்திருந்த நிலையில், அரசியல் விடுதலையை விட சமுதாய விடுதலைக்குப் பாரதிதாசன் முன்னுரிமை தந்துள்ளார். 1938ஆம் ஆண்டில் வெளிவந்த அவருடைய முதல் கவிதைத் தொகுதியில் சமுதாய நோக்குடைய கவிதைகள் பெரிதும் இடம் பெற்றிருந்தன. 1920இல் பாரதியின் இறப்பினுக்குப் பின்னர் பாரதிதாசனுக்குள் ஏற்பட்ட மாற்றம், 1928இல் அவரைப் பெரியாருடைய கருத்துகளிடம் கொண்டு போய்ச் சேர்த்துள்ளது. திராவிட நாடு பற்றிய பேச்சுடன், பொதுடைமைக் கொள்கை பற்றிய பாரதிதாசனின் பாடல்கள் கவனத்திற்குரியன.

“பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டின் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே இந்திய நாட்டின் அடிமை நிலை மாற வேண்டுமெனில் சமுதாய மறுமலர்ச்சி தேவை என்ற கருத்து, பாரதிதாசன் என்ற ஆளுமை உருவாக்கத்தில் முக்கியமானது.

**பேதம் வளர்க்கப் பெரும்பெரும் புராணங்கள்...**
**இந்த நிலையில் சுதந்திரப் போரெங்கே?**
**கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை**
**முளைப்பதெங்கே?”**

தேசிய உணர்வு என்பது பாரதிதாசனின் ஆழ்மனதில் அழுத்தமாகப் படிந்துள்ளது. அது காங்கிரஸ் இயக்கமும் பார்ப்பனர்களும் சுட்டும் தேசியம் அல்ல. எல்லாருக்கும் எல்லாம் என்ற மனநிலையில் சமுதாய ஏற்றத் தாழ்வற்ற சூழலை எண்ணிக் கனவு காணும் பாரதிதாசன், நடப்புப் பிரச்சினைக்கு முன்னுரிமை தந்துள்ளார். அம்பேத்கர், பெரியார் போன்ற சமுதாயச் சீர்திருத்தவாதிகளும் சமுதாய மறுமலர்ச்சிக்கு முக்கியத்துவம் தந்தது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

ஆங்கிலேயரின் தொடர்பு, ஆங்கிலக் கல்வி காரணமாக விழிப்படைந்த விளிம்பு நிலையினர், ஏற்கனவே பல நூற்றாண்டுகளாக அடக்கியொடுக்கியிருந்த பார்ப்பனர் உள்ளிட்ட மேல்சாதியினர் மீது வன்மமும் விரோதமும் கொள்வது இயற்கையானது தான். இந்நிலைமைக்குப் பாரதிதாசனும் விலக்கு அல்ல என்பதை அவருடைய பாடல்கள் புலப்படுத்துகின்றன.

பார்ப்பனர் பெற்றுள்ள சமூக மேலாதிக்கத்திற்குப் பின்புலமாக கடவுள், புராணம் போன்றவற்றை முன்னிறுத்தும் இந்து மதத்தினை நொறுக்குவது என்பது 193 0களில் சமூகத் தேவையாக இருந்தது. பொதுவுடைமை கொள்கையை உயிர் எனக் கருதும் பாரதிதாசன், பார்ப்பனிய எதிர்ப்பினை வலியுறுத்துவது பொருத்தமானதே. பாரதிதாசன் ‘சாதி, சமயம்’ என்ற குறுகிய

எல்லைக்குள் தனது கவித்துவத்தைச் சுருக்கிக் கொண்டார் என்ற பார்வை, வாலாற்றியல் அணுகுமுறைக்கு முரணானது.

*1917*இல் நடைபெற்ற சோவியத் புரட்சி, புதிய ஐந்தாண்டு திட்டங்களின் மூலமாக வேகம்வேகமாக வளர்ச்சி பெற்ற சோவியத் ரஷியா, லெனின், ஸ்டாலின் போன்றோரின் சமூக நலத்திட்டங்கள் என ரஷியா பற்றிய பல்வேறு தகவல்கள் *1930*களில் வெளியாகிக் கொண்டிருந்தன. பெரியார், பொதுவுடைமைக் கட்சி அறிக்கையினை மொழிபெயர்த்து *1931*இல் குடியரசு இதழில் வெளியிட்டார். *1932*இல் சோவியத் ரஷியா பயணம் மேற்கொண்டு திரும்பிய பெரியார் 'பொதுவுடைமைத் தத்துவங்கள்' நூலை வெளியிட்டார்; 'புரட்சி' வார இதழைத் தொடங்கினர். லெனின் பற்றிய கட்டுரை புரட்சி இதழில் வெளியிட்டதற்காகப் பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியாரின் சீர்திருத்தக் கருத்துகளால் கவரப்பட்ட பாரதிதாசன், பொதுவுடைமைக் கொள்கை மீது பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். இத்தகைய நிலைப்பாட்டில் பாரதிதாசனின் நடைமுறை பாரதியிடமிருந்து முழுக்க வேறுபட்டுள்ளது. *1917* பிப்ரவரியில் ரஷியாவில் ஜார் மன்னரை அகற்றுவதற்காக மென்ஷ்விக்குகள் முன்னெடுத்த புரட்சியை வரவேற்றுப் பாரதியார் பாடல் பாடியுள்ளார். பின்னர் *1917* நவம்பரில் போல்ஷ்விக்குகள் லெனின் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றி, சோசலிச அரசை நிறுவ முயன்றபோது ஏற்பட்ட வன்முறையினைப் பற்றிக் கேள்விப்பட்ட பாரதியார், "லெனின் வழி சரியில்லை, ஸ்ரீமான் லெனின் சொல்வது முற்றிலும் தவறான கொள்கை, தம்மைத் தாமே உணராத பரம மூடர் என்று கண்டித்துள்ளார். பாரதிதாசன் பொதுவுடைமைக் கொள்கையை வரவேற்றதுடன் லெனினைப் போற்றியுள்ளார்.

*1924*இல் லெனின் இறந்தபோது, பாரதிதாசன் "காலஞ் சென்ற நிக்கோலாய் லெனின்" என்று பாமாலை சூட்டுகிறார். ஆட்சியைப் பொதுமை செய்', 'உடைமை பொதுவே' என ஆத்திசூடியில் குழந்தைகளுக்காகப் பாரதிதாசன் பாடியிருப்பதும் கவனத்திற்குரியது. பாரதிதாசன் என்ற கவிஞரின் பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கருத்தில் கொள்ளாமல், அவரை வகுப்புவாதம் பேசிய கவிஞர் என்று தமிழகத்து இடதுசாரி அமைப்பினர் அண்மைக்காலம் வரை குற்றம் சாட்டி வருகின்றனர். இத்தகைய குற்றச்சாட்டு ஒரு பக்கச் சார்புடையயது. தேசிய உணர்வு என்ற பொத்தாம் பொதுவான லேபிளின் கீழ் அனைத்தையும் குழிதோண்டிப் புதைப்பது ஏற்புடையதல்ல.

*1885*இல் தொடங்கப்பெற்ற காங்கிரஸ் இயக்கம், *1927*இல் தான் சென்னையில் கூடி, தேசிய சுதந்திரம் பெறுவதே தனது குறிக்கோள் என்று முதன் முதலில் முடிவெடுத்துள்ளது. *1942*இல் 'வெள்ளையனே வெளியேறு' எனப் போராட்டம் உச்சநிலை அடைந்தது. தேசியத்தை லட்சியமாகக் கொண்ட காங்கிரஸ் இயக்கத்திற்கு 'அந்த முடிவை' எடுக்கப் பல்லாண்டுகள் ஆகியுள்ளன. இந்நிலையில் கவித்துவ ஆளுமை மிக்க பாரதிதாசன் என்ற கவிஞரைத் தேசியக் கவிஞராக மட்டும் இருக்க வேண்டும் என ஒற்றைத்தன்மையில் எதிர்பார்ப்பது சரியல்ல. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், நிர்வாக வசதிக்காகவும், ஒட்டுமொத்தச் சுரண்டலுக்காகவும், பல்வேறு தேசிய இனங்களாக இருந்த, பல்வேறு மொழிகள் பேசும் மக்களை ஒரே கண்ணியான 'நாடு' என்பதில் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒரு வகுப்பு, சாதியினர் இன்னொரு பிரிவினரைப் பண்பாடு, பொருளியல் ரீதியில் அடக்கியொடுக்க முயலும்போது 'தேசியம்' என்ற சொல் கேள்விக்குரியதாகிறது. ஒவ்வொரு தேசிய

இனங்களின் தனித்துவமும் அடையாளமும் ஏற்றத்தாழ்வு இன்றி பேணப்படும் போது தான் 'தேசியம்' என்பது அர்த்தமுடையதாகும். அவ்வகையில் பாரதிதாசன் முன்னிறுத்திய தமிழ்த் தேசியம், நாட்டின் ஒருமைப்பாட்டினுக்கு ஆதரவானது. ஒரு முனையில் பொதுவுடைமைக் கருத்தும், இன்னொரு முனையில் தமிழ்த் தேசியக் கருத்தும் பேசிய பாரதிதாசன், அன்றைய காலகட்டத்தின் வெளிப்பாடு.

தமிழ், தமிழர், தமிழினம் என்று தமிழ்த் தேசிய உணர்வினுக்குச் சார்பாகக் கவிதையெழுதிய பாரதிதாசன், வைதிக சநாதன சமயத்தை மட்டும் வெறுத்தவர் அல்ல; உலகிலுள்ள மதங்கள் யாவும் மனித வளர்ச்சிக்கு எதிரானவை என்ற நிலையில் மார்க்சிய லெனினியக் கருத்துகளை "உட்டோப்பியா" மனநிலையில் வரவேற்கிறார்.

**"சேசு முகம்மது என்றும் – மற்றும்**
**சிவனென்றும் அரியென்றும் சித்தார்த்தென்றும்**
**பேசி வளர்க்கின்ற போரில் – உன்**
**பெயரையும் கூட்டுவர் நீ ஒப்ப வேண்டாம்**
**பாரடா மானிடப்பரப்பை"**

என்ற சர்வதேச மனிதனாகத் தன்னைக் கருதிய பாரதிதாசனின் மனநிலை குறுகிய இன, சாதி, சமய, பால் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது.

அரசியல் விடுதலை தான் முதன்மையானது. அதனைத் தொடர்ந்து பொருளாதார விடுதலை கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருந்தவர்களிடையே பாரதிதாசனின் அணுகுமுறை வேறுபட்டது. அன்றைய உடனடிப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு மனிதனை மனிதன் மதிக்கின்ற உண் மையான சமுதாய விடுதலையின் மூலம் தான் பொருளாதார விடுதலை சாத்தியம் என்று கருதியவர், பாரதிதாசன். அவருடைய கருத்தினை ஏற்காமல், இனவாதம் பேசுகின்றார் என அவரைப் புறக்கணித்தவர்களில் இடது சாரிகளும் அடங்கும். இன்று இந்திய நாடு விடுதலையடைந்து 63 ஆண்டுகள் கடந்த பின்னரும் நான்கு ஐந்தாண்டுகள் திட்டம் நிறைவேறிய பின்னரும், உணவு உற்பத்தியில் பற்றாக்குறை உள்ளது; தூய குடிநீர், தூய காற்று இல்லாத சூழல். அதிலும் உலகமயமாக்கலுக்குப் பின்னர் இந்தியாவின் சுயேச்சையான பொருளாதாரம், அரசியல் என்பது கேள்விக்குறியாகி விட்டது. எல்லாவற்றையும் நுகர்பொருள் பண்பாட்டிற்குள் அடக்கி, வணிகமயமாக்கும் நிலையில் எல்லாவிதமான அடையாளங்களையும் அழித்தொழிக்கும் முயற்சிகள் துரிதப்படுத்தப்படுகின்றன. இன்னொருபுறம் தமிழ் போன்ற வரலாற்றுப் பழமையான மொழிகள், தமது பாரம்பரியத்தை இழப்பதுடன் வீட்டு மொழியாகச் சுருங்கிக் காலப்போக்கில் அழிந்துவிடும் அபாயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே தமிழ் அடையாளத்தை முன்னிறுத்திப் பாரதிதாசன் இயற்றிய கவிதைகள், இன்று மீண்டும் தேவைப்படுகின்றன.

பாரதிதாசன் என்ற படைப்பாளியின் இரண்டாம் கட்ட நிலை, 1938-இல் வெளிவந்த "எதிர்பாராத முத்தம்' தொகுப்பிலிருந்து வெளிப்படுகிறது. பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளைத் தனது லட்சியமாகக் கொண்ட பாரதிதாசனின் பயணம் புதிய தடத்தில் பயணிக்கிறது. நூலின் முதல் பகுதியில் ஆரியரின் சூழ்ச்சிக்குப் பலியான காதலரின் கதை விவரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில் சைவ சமயத் துறவியான குமரகுருபரரைப் போற்றுவது பாரதிதாசன் என்ற ஆளுமையில் ஏற்பட்ட பின்னடைவுதான்.

**திருமலிந்து மக்கட்குச் செம்மை பாலிக்கும்**
**தருமபுரம் வீற்றிருக்கும் சாந்த குருமூர்த்தி**

குமரகுருபரர் வடக்கே காசியில் மடம் நிறுவியது குறித்துப் பாரதிதாசன் புகழ்வது,

இதுவரையில் பெரியாரின் வழியில் சுயமரியாதைக் கருத்துகளுக்கு முன்னுரிமை தந்து பாடியதுடன் முரண்படுகிறது. கவிஞன் என்ற நிலையில் கருத்து ரீதியில் பாரதிதாசன் கொள்ளும் உணர்ச்சிப்பெருக்கு அவருடைய அன்றாட வாழ்க்கையிலும் தொடர்ந்து வெளிப்பட்டுள்ளது. 1934ஆம் ஆண்டு மணிக்கொடி இதழில் ந.பிச்சமூர்த்தி எழுதிய "காதல்" என்ற புதுக்கவிதை பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து சிவாஜி, சூறாவளி, கலாமோகினி, கிராம ஊழியன் போன்ற இதழ்களில் புதுக் கவிதைகள் வெளியாகின. அன்றைய காலகட்டத்தில் யாப்பின் செல்வாக்கு வலுவாக இருந்தமையினால், புதுக்கவிதை என்பது விஜிடபிள் பிரியாணி, கோவேறு கழுதை எனக் கேவலமாகக் கருதப்பட்டது. இத்தகு சூழலில் மரபு வழிபட்ட புலமைச் செருக்குடைய பாரதிதாசன் புதுக் கவிதையைப் பற்றி என்ன கருதினார் என்பது தெரியவில்லை. 1938 இல் தான் பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுதி வெளியாகியுள்ளது. மேலைநாட்டுக் கவிஞர்களான டி.எஸ்.எலியட், எஸ்ரா பவுண்ட் போன்றோரின் கவிதைகளின் தாக்கமும், பாரதியாரின் வசன கவிதைகளும் தமிழ்க் கவிதை ஆக்கத்தில் மெல்லப் பாதிப்பை ஏற்படுத்தி, வடிவரீதியில் மாற்றமேற்படுத்திக் கொண்டிருந்தன. 1955 இல் வெளியான எழுத்து இதழ் புதுக்கவிதைக்கு முக்கியத்துவம் தந்து தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருந்தது. பாரதிதாசன் தனது கவிதையாக்கத்தில் அவற்றைப் புறந்தள்ளிவிட்டு, வழிபட்ட நிலையில் 1962இல் கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா எழுதிக் கொண்டிருந்தார். மாறிவரும் இலக்கியச் சூழல் குறித்துப் பாரதிதாசன் தனது வாழ்நாளின் இறுதிவரையிலும் அக்கறை கொண்டிருக்கவில்லை. அவர் வாழ்ந்த காலகட்டத்தில் எது கவிதை எனப் பொதுப்புத்தி நிலவியதோ, அதையே பின்பற்றினார். சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளில் புரட்சிகரமான மாற்றம் வரவேண்டுமென விழைந்த பாரதிதாசன் கவிதை வெளிப்பாட்டில் அழுத்தந்திருத்தமாக மரபினையே பெரிதும் நம்பினார்.

தமிழறிஞர் தெ.பொ.மீ. பற்றி 'குயில்' இதழில் விமர்சனக் கவிதைகள் எழுதிய பாரதிதாசன், ஆதாரங்களைக் கருத்தில் கொள்ளாமல், பிறர் சொல்வதை உண்மை என்று நம்பி முடிவு எடுக்கும் இயல்புடையவர் என்று அவருடன் பல்லாண்டுகள் நெருங்கிப் பழகிய ஈரோடு தமிழன்பன் குறிப்பிட்டுள்ளார். அவர் விவரிக்கிறார்: நான் தெ.பொ.மீ. அவர்கள் பற்றி ஒருநாள் கேட்டேன்.

**"அவன் ரொம்ப நல்லவன்பா"**
நான் குறுக்கிடவில்லை.

என்னன்னு கேளு! புலவர்குழுக் கூட்டம் நடந்தப்போ நான் சாப்பிட்டு எழுந்து வர்றேன். கை கழுவ அவன் தண்ணி எடுத்து ஊத்தறான்பா. நாமதான் கண்டபடியா எழுதிட்டோம்.

தமிழுக்குப் பகைவன் தெ.பொ.மீ என்று கடுமையாகத் தாக்கி எழுதிய பாரதிதாசன், ஒரு சிறிய செயலின் காரணமாகக் கனிந்து தன்மீது வருத்தம் கொள்கிறவராக மாறிப்போனார். இதுதான் பாரதிதாசனின் இன்னொரு முகம்; பலரும் அறியாதது; கவிதை மனம்.

பார்ப்பன எதிர்ப்பு என்று கடைசி வரையிலும் பேசிக் கொண்டிருந்த பாரதிதாசன், பாரதியாரைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'ஐயர்' என்று மரியாதையாகக் குறிப்பிடுகிறார். பாரதியாரிடம் தனிப்பட்ட முறையில் அவர் கொண்டிருந்த பேரன்பு, அவருடைய இறுதிக் காலத்திலும் யாராவது பாரதியாரைப் பற்றித் தரக்குறைவாகப் பேசினாலோ, பாரதியின் பாடல்களைத் தவறாகப்

பாடினாலோ கோபம் கொண்டு கடுமையான சொற்களால் திட்டுவதைப் பாரதிதாசன் வழக்கமாகக் கொண்டிருந்தார். பாரதிதாசன் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை அவதானிக்கும்போது, அவர் தனிப்பட்ட பார்ப்பனர்களை வெறுக்கவில்லை; வருணாசிரமத்தைத் தூக்கிப் பிடித்து, பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வினை நியாயப்படுத்தும் பார்ப்பனியத்தைத் தான் கடுமையாகச் சாடினார் என அறிய முடிகிறது.

பாரதிதாசன் என்ற கவிஞரின் ஆளுமை உருவாக்கத்தில் பெரியாரின் கருத்துகள் முக்கியமான இடம் வகிக்கின்றன. பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கருத்துகளை, "சுயமரியாதை கொள் தோழா" என்று வரவேற்றுப் பாடியுள்ளார். மதம், புராணம், இதிகாசம், கடவுள், மூடப்பழக்கவழக்கம் போன்றன குறித்த பெரியாரின் கருத்துகளைச் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" என்ற குறுங்காவியத்தில் பதிவாக்கியுள்ளார். பாரதிதாசன் பெண் பற்றிய தனது கட்டுரையில் கருத்தடை பற்றிப் பெரியார் குறிப்பிட்டதை, '**காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்**' எனப் பாரதிதாசன் கவிதை வரிகளாக்கியுள்ளார். பெண்கள் மீதான அக்கறையினால் கருத்தடை முறை வேண்டும் என இந்தியாவில் முதன் முதலாகக் கவிதை எழுதியவர் பாரதிதாசன் தான். மரபு வழிப்பட்ட புலவர் பரம்பரையில் வந்த பாரதிதாசன் கருத்தடை பற்றிக் கவிதை பாடியது, அவருடைய சமூக ஈடுபாட்டின் இன்னொரு பரிமாணம். பாரதிதாசனின் கவிதை வரிகளில் பெரியாரின் சிந்தனை எந்த அளவில் ஆழமாக ஊடுருவியுள்ளது என ஆராய்ந்தால் அது தனித்ததொரு நூலாகும். தமிழரின் வாழ்க்கையில் பெரியாரின் வருகைக்குப் பின்னர் தான் விடியல் தோன்றியது என்ற நம்பிக்கையுடைய பாரதிதாசன் என்ற கவியின் ஆளுமை உருவாக்கத்தில் பெரியாரின் எழுத்துகள் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

திராவிட இயக்க இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் அரசியல் நோக்கம் கருதிப் படைக்கப்பட்டவை. தனிப்பட்ட படைப்பாளியின் மன விகாரங்களையும் மன அலசல்களையும் பதிவாக்குதல் என்பது மிகக்குறைவு. இத்தகைய படைப்பு தான் படைக்கப்பட்ட காலகட்டத்தில் மக்களிடையே வீர்யமுடன் பரவின; இதுவரை சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய வைதிக சநாதனத்தின் குரல்வளையை நெறித்தன. ஓர் இலட்சியத்துடன் அரசியல்தளத்தில் மாற்றம் வேண்டிப் போராடிய திராவிட இயக்கப் போராளிகளுக்கு இலக்கியப் படைப்புகள் வாளும் கேடயமுமாகப் பயன்பட்டன. அதிலும் மரபுக்கவிதைகள் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டத்தில், சுயமரியாதைக் கருத்துகளைக் கவிதைகளின் மூலம் பரப்பிய பாரதிதாசனின் கவிதைத் தொகுப்புகள் பெரிதும் வரவேற்புப் பெற்றிருந்தன. 'வாள் முனையை விடப் பேனா முனை கூர்மையானது என்ற பிரெஞ்சு சிந்தனையாளர் வால்டேரின் குரல், இராவிட இயக்கப் படைப்பாளிகளுக்கு வேதமாயிற்று.

ஐம்பதுக்கும் கூடுதலான திராவிட இயக்க இதழ்கள் வெளிவந்தன; நூற்றுக்கணக்கான இலக்கியவாதிகள் திராவிட இயக்கப் படைப்பாளிகளாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். இத்தகு சூழலில் 'கவிதை' வடிவத்தில் பாரதிதாசனின் பங்கு அளவிடற்கரியது. சந்தம் மிக்க வரிகள் மூலம் பாரதிதாசன் பாடியப் பாடல்கள் இசையின் துணையுடன் எங்கும் பரவின.

சொல்லாடல்கள் அவருடைய ஆளுமைக்கு வலுவான பின்புலமாக உள்ளன. 1937இல் ஆட்சிக்கு வந்த ராஜகோபாலாச்சாரி தமிழகப்

பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். தமிழ் போன்ற செவ்வியல் தன்மை கொண்ட பாரம்பரியமான மொழி பேசும் மக்கள் மீது இந்திய தேசியத்தின் அடையாளமாக இந்தி மொழியைத் திணித்தது வரலாற்றில் பெரும் பிழையாகும். நாடு விடுதலையை நோக்கிய போராட்டத்தில் பலரும் ஒன்றிணைந்து செயல்படும் சூழல், சாதி சமயப் பிளவுகளால் பிளவுண்டிருந்த மக்களிடையே சமூக விழிப்புணர்வுக்கான போராட்டம் என இரு வேறு நிலைகளில் கொதிப்புடனிருந்த தமிழகத்தில், திடீரென இந்தி மொழியைப் பாடமாக்கியது. பண்பாட்டு ரீதியில் தமிழர்கள் மீது விடப்பட்ட சவால். மக்கள் தொகையில் 25% பேர் மட்டும் கல்வியறிவு பெற்றிருந்த அன்றைய காலகட்டத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பலர் உயிரிழந்தனர்; பலர் சிறைக்குள்ளாக்கப்பட்டனர். தமிழை உயிரென நினைத்த புலவர் பரம்பரையில் வந்த பாரதிதாசனுக்குக் கோபம் பீறிட்டது.

**மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை – எமை மாட்டிட நினைத்திடும் சிறைச்சாலை**

இந்த வரிகள் இன்றைய வாசிப்பில் வெற்றுக் கிளர்ச்சியையும் ஆரவாரத்தையும் தரும் மிகைப்படுத்தப்பட்ட சொற்களாகத் தோன்ற வாய்ப்புண்டு, ஆனால், அன்று பாரதிதாசனின் கவித்துவமான வரிகள் வீரியத்துடன் உரத்து முழங்கின. அவருக்குள் பொங்கிய சமூக ஆவேசம், சொற்களாக வெளிப்பட்டது; தீக்கங்குகளாக ஒளிர்ந்தது.

**இந்திக்கு தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் – நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே**

தமிழ்ப் புறப்பாடல்கள் வெளிப்படுத்தும் வீரத்தின் முழக்கம் பாரதிதாசனிடம் கவிதை வரிகளாகப் பொங்கியுள்ளது. வெறும் உணர்ச்சி மட்டுமல்ல, வாழ்வின் மீதான பெருங்காதலுடன் அறைகூவல் விடுத்துள்ள பாவேந்தரின் தமிழ் பற்றிய மனப்பதிவுகளாக விளங்குகின்றன. தமிழகத்தின் புனைவியல் கவிஞர் என்பதற்கேற்ப பாரதிதாசனின் கவிதை வரிகள், செறிந்த மன உணர்வுகளின் வெளிப்பாடாக உள்ளன. பாரதிதாசன் என்ற கவித்துவ ஆளுமையின் அடித்தளமாகத் தமிழ் பற்றிய பிரக்ஞை செயல்பட்டுள்ளது.

பாரதிதாசன் என்ற ஆளுமையின் இன்னொரு முக்கியமான காலகட்டம் அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, முல்லைக்காடு, தமிழியக்கம், தமிழச்சியின் கத்தி போன்ற கவிதை நூல்கள் சார்ந்தது. ஆவேசத்துடன் வாளாகக் கழற்றி, சுயமரியாதை இயக்க வீரர்களுக்கு வழங்கிய பாரதிதாசனின் பதற்றம் பிற்காலத்தில் தணிந்தது. பெரியார், காமராசர் போன்ற தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பாரதிதாசனுக்குத் தமிழகம் ‘பாவேந்தர்’ என்ற அடைமொழி தந்தது. இறைச்சி உணவு சாப்பிட்டுத் தமிழர்கள் ஆற்றலுடனும் துடிப்புடனும் விளங்க வேண்டுமென்று தன்னைப் பார்க்க வருகின்றவர்வர்களுக்கு ஆலோசனைகளைத் தந்து கொண்டிருந்தார். இப்போக்கின் நீட்சியாகத்தான் தனது 67 வது வயதில் புலவர் குழுக் கூட்டத்தின் முன்னர் அலங்காரமாகச் சென்று கொண்டிருந்த யானையை நிறுத்தி அதன் மீது ஏறி ஊர்வலமாகச் சென்ற பாரதிதாசனைப் புரிந்துள்ள முடியும். பாரதிதாசனைப் பற்றிய நினைவுகளை அவருடன் நெருங்கிப் பழகிய முருகு சுந்தரம், ஈரோடு தமிழன்பன் போன்றோர் எழுதிய நூல்களை வாசிக்கும் போது, அவர் யாருக்கும் அடங்காத மனப் போக்கினைக் கொண்டிருந்தார் என அறிய முடிகின்றது. கிறுக்கன், கிண்டல்காரன், கண்டெழுதுவோன் என்ற புனைபெயர்களிலும் எழுதிக் கொண்டிருந்த பாரதிதாசன் அன்றாட வாழ்க்கையில் கலகக்காரராக

விளங்கினார். பண்டைக்காலப் புலவர் பரம்பரையினருக்கு உரிய கர்வமும் கம்பீரமும், கவிதைச் செருக்கும் அவரிடம் நிரம்பி வழிந்தன. கோபமும் உணர்ச்சி வசப்படும் மனநிலையினையுடைய பாரதிதாசனின் உள்ளம் "புலவர்" என்ற நிலையினை ஆதாரமாகக் கொண்டு சுழன்றது. பாரதியைப் பற்றி ஆவணப்படம் எடுக்க முயன்றது. பாண்டியன் பரிசு குறுங்காவியத்தைத் திரைப்படமாக்க முயன்றது என அவரின் தேடல்கள் இடைவிடாமல் தொடர்ந்தன. திரைப்படத் துறையின் சீரழிவுக்குள் சிக்கினாலும், அவருக்குள் எப்பொழுதும் கனன்றுகொண்டிருந்த இலட்சியம் உயிரோட்டம் மிக்கதாக விளங்கியது.

பாரதிதாசன் முதல் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகளுக்கும், 1950களில் எழுதிய கவிதை நூல்களுக்கும் நிரம்ப வேறுபாடுகள் உள்ளன. 1962இல் எழுதப்பட்ட கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா போன்ற நூல்கள் அவருடைய கவிதைப் பயணத்தில் ஏற்பட்ட சறுக்கல்களே. ஒடுக்கப்பட்டிருந்த தமிழ்ச் சமூகத்தின் உயிர்த்துடிப்பாக வெளிப்பட்ட பாரதிதாசனின் பிற்காலப் படைப்புகள், அவருடைய பெயரில் வெளியானதால் இன்றளவும் நிலைத்திருக்கின்றன. திராவிட இயக்கத்தின் முரண்பாடுகள், தி.மு.க.வின் தோற்றம், அன்றைய அரசியல் சூழல் போன்றன கவிஞரின் கொந்தளிப்பான மனநிலையை நீர்த்துப் போகச் செய்திருக்க வாய்ப்புண்டு. 1940களுக்குப் பிந்தைய பாரதிதாசனின் படைப்புகள் அவரது பிற்காலப் படைப்புகளுடன் ஒப்பிடுமளவு கவித்துவச் செறிவுடன் இல்லை. அவருக்குள் கொந்தளித்துக்கொண்டிருந்த குறிக்கோள் மனநிலை, சூழலின் காரணமாகத் தணிந்தது என்று கருத இடமுண்டு.

பாரதிதாசனின் படைப்பாக்கத் திறனில், அவரைக் கவிதைகள் தான் உச்சநிலையை அடையச் செய்துள்ளன. கவிதையின் மூலம் அன்றாட வாழ்வின் இழிவுகளையும் மேன்மைகளையும் பதிவாக்கியுள்ள பாரதிதாசனின் கவிதை ஆளுகை, வரலாற்றில் தனக்கான இடத்தினைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. பாவேந்தரின் கவிதைகளைப் புறக்கணித்துவிட்டு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளைத் தொகுப்பது இயலாது. திராவிட சமுதாயத்தின் படைக்கலன்களில் ஒன்றாகவே பாரதிதாசன் கவிதைகளைக் கையாண்டுள்ளார். அவருடைய தோற்றப் பொலிவினுக்குக் கவிஞர் என்ற அடையாளம் தான் ஒளியைச் சேர்க்கின்றது.

பாவேந்தரின் கவிதைகள் முன்னிறுத்தும் சமூக மதிப்பீடுகள் மறுவாசிப்பிற்குரியன. பொதுவாக கவிதைகள், அவை வெளியான காலகட்டத்தினுக்கும் இன்றையச் சமூகச் சூழலுக்குமிடையில் முரண்படுவது இயற்கைதான். ஒரு குறிப்பிட்ட அரசியல் நெருக்கடி காரணமாக எழுதப்பட்ட கவிதைகள், மாறிவிட்ட சமூகச் சூழலில் பெறுமிடம் முக்கியமானது. ஒரு காலகட்டத்தில் பொதுப்புத்தியில் அதிர்வுகளை உண்டாக்கிய பாவேந்தரின் கவிதைகளுடைய சமகாலத் தன்மையைக் கண்டறிய வேண்டியுள்ளது. முன்னர் வைதிக சநாதனம் சமயம் சமூகத் தடைகள் இன்று பெருமளவில் தகர்க்கப்பட்டு விட்டன.விதவை மறுமணம், தீண்டாமை ஒழிப்பு, வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பார்ப்பனியர் எதிர்ப்பு போன்ற கருத்தியல்கள் மக்களிடையே ஆழமாகப் பரவியுள்ளன. அவை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் கவிதைகளுக்கு இன்று பெரிய அளவில் வரவேற்பில்லை. சமூகச் சீர்திருத்த நோக்கமுடைய கவிதைகள், நிறைவேறியவுடன் தானாகவே அந்த நோக்கம் செல்வாக்கிழந்து விடுகின்றன. இதனால் அந்தக் கவிதைகளை மக்கள்

புறக்கணித்து விட்டனர் எனக் கருதத் தேவையில்லை; அவை சமூகப் பதிவுகளாக மாறி விடுகின்றன. பாரதிதாசனின் முதல் தொகுதியில் இடம் பெற்றுள்ள பல பாடல்கள் இன்றளவும், முக்கியமானவை. புதியதோர் உலகம் செய்வோம், சித்திரச் சோலைகளே, சங்கே முழங்கு, தமிழுக்கு அமுதென்று பேர் போன்ற பாடல்கள் கருத்தியல் சார்ந்த வெளிப்பாட்டில் காலங்கடந்து நின்று பாரதிதாசனை என்றும் நிலைநிறுத்தும் இயல்புடையன.

தமிழ், தமிழர் என்ற சொல்லாடல்களின் பின்புலத்தில் பொதிந்துள்ள அரசியலும் பகுத்தறிவும் ஆழமாக அறியப்பட்ட சூழலில் கனக சுப்புரத்தினம் என்ற இளைஞர் பாரதிதாசன் என்ற இலக்கிய ஆளுமையாகத் தமிழ்ச் சமூகத்தில் உச்சமடைந்தது வரலாற்றின் தேவையாகும்.

**சான்றாதாரம்**

1. பாரதிதாசன் கவிதைகள். சென்னை, ஸ்ரீ இந்து பதிப்பகம், 2015.
2. ஈரோடு தமிழன்பன். பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள். சென்னை, விழிகள் பதிப்பகம், 2000.
3. இளங்கோவன். பாரதிதாசன் பரம்பரை. ஆர்க்காடு, முகிலரசி பதிப்பகம், 2001.
4. நெல்லை ந. சொக்கலிங்கம். பாவேந்தரின் எண்ணமும் எழுத்தும். தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், 2014.